# தமிழ்ச் சமூக வெளி வளர்ச்சியில் சமயங்களின் பங்கு

**மா. கோதாவரி,**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்,**
mgothavari@gmail.com

23

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்ச் சமூகத்தில் அரசதிகாரத்திற்கு பலமாக தமிழ் மொழித்திறன் பெற்றவர்களின் கூட்டுவாழ்வு இருந்திருக்கிறது. அவர்கள் போர்காலச் சமூகத்தின் அரசியல் பொருளாதாரத்தில் அதிகாரத்தை தீர்மானிக்கும் வீரர்க்குரிய மூலதனங்களை பெற்று விளங்கியிருக்கின்றனர். எனவே, தமிழ்மொழித்திறன் பெற்றோரின் கூட்டுவாழ்வை பியர் பூர்தியு கூறும் சமூக வெளியாகக் கொள்ளலாம். தற்போது கிடைக்கும் இலக்கியங்களுள் தமிழ்ச் சமூக வெளியினை அதிகாரத்திற்கான பலமாக புலப்படுத்தியும் அவற்றின் இருப்பை புலப்படுத்தாமல் விடுவதிலும் சமயங்களின் பங்களிப்பு இடம்பெறுகிறது. குறிப்பிட்ட காலகட்டத் தமிழ்ச்சமூக வெளியின் அதிகார மதிப்பீட்டினை அக்காலக் இலக்கியங்கள் முன்வைக்கும் சமயத் தத்துவங்களுக்கும் தமிழ்ச் சமூக வெளியின் பண்பாட்டிற்கும் இடையிலான ஒத்திசைவு கொண்டு கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுகோல் ;** சமூக வெளி, பண்பாட்டுத் தளம், பியர் பூர்தியு, சமய இலக்கியங்கள், சமய வழிபாடு

**ஆய்வு முன்னுரை**

சமூகம் பல வகையான குழுவமைப்புக் கொண்ட மக்களைக் கொண்டு இயக்கம் கொள்கிறது. அக்குழு அமைப்பினை சமூக வெளிகளாக பியர்பூர்தியு முன்வைக்கிறார். பியர் பூர்தியு என்பவர் பிரன்சு சமூகவியலாளர். அவர் தனது மொழி மூலதனக் கோட்பாட்டில் மொழித்திறனும் ஊடகங்களில் மூலதனமாகச் செயல்பட்டு அதிகாரக் குழு அமைப்பைச் செயல்படுத்தும் ஆற்றலுடையது என்கிறார். சமூகத்தில் இயங்கும் குழுவமைப்புகளைக் கண்டறிய சமூக வெளி கருத்துருவைப் பயன்படுத்துகிறார். அதாவது, இயக்கமுடைய சமூகமானது பல்வேறு கோணமுடைய சமூக வெளிகளைக் கொண்டு இயங்குகிறது. குறிப்பிட்ட மூலதனம் அல்லது தனித்தன்மை பெற்றிருப்போரின் ஒருங்கிணைவு சமூகத்திற்குள் பலத்தையும் அதிகாரத்தையும் வழங்கும் திறன் கொண்டதாக அமையும். அவ்வொருங்கிணைவை சமூகவெளி எனக் குறிப்பர். அதாவது, சமூக வெளி என்பது சமூகத்திற்குள் குறிப்பிட்ட பலத்தையும் அதிகாரத்தையும் செயல்படுத்தும் வல்லமை உடையதாக இருக்கும். இவ்வாறாக அதிகாரத்தையும் பலத்தையும் சமூகத்தில் செலுத்தும் தமிழ்ச் சமூக வெளி நிலவியதை நிறுவி அத்தமிழ்ச் சமூக வெளி வளர்ச்சியில் சமயங்கள் இடம்பெறும் திறத்தை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

தமிழ் மொழித்திறன் என்பது குறிப்பிட்ட தனித்தன்மையுடையதாக இருந்திருக்கிறது. அத்தமிழ் மொழித்திறன் பெற்றவர்கள் ஒருங்கிணைந்து ஒன்றாக இருந்தமை, அக்காலக் கட்ட அதிகாரத்திற்குப்

பலமாக இருந்துள்ளது. சான்று,

“அண்ணல் கோயில்/தாதின் அனையர் தண் தமிழ் குடிகள்/தாது உண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்” (பரி. 5. திருமால்) என பாண்டிய நாட்டு அரண்மனையில் வாழும் தமிழ்க் குடிகளும் அத்தமிழ் குடிகளைச் சார்ந்து வாழும் பரிசிலர்களும் பரிபாடலில் குறிப்பிடப்படுகின்றன. இதுபோலத் தமிழ் பேசும் மக்களால் சிறப்படைந்த அரசதிகாரமும் இருந்திருக்கிறது.

“தமிழ் பெற்ற தாங்கு அரு மரபின்/மகிழ் நனை மறுகின் மதுரையும் வறிதே”(சிறு. 65)

எனத் தமிழ்மொழி நிலைபெற்று விளங்கிய மதுரையைச் சிறுபாணாற்றுப்படையும் பரிபாடலும்(பரி.26.4) (பரி. 31.9) (பரி. 6. வையை) குறிப்பிடுவதன் வழி பெற முடிகிறது.

இதனைத் தொடர்ந்தே தமிழ் பேசும் மக்கள் வாழும் நில எல்லைகூட அரசதிகாரத்திற்குக் குறிப்பிட்ட அடையாள மதிப்பை வழங்கியிருக்கிறது. ஆகையால்தான், தமிழ் நிலம் மூவேந்தர்க்கு உரியது(அகம்.31) என்றும் பாண்டியனுக்கு உரியது(புறம். 51) என்றும் சோழனுக்கு உரியது(புறம்.35) என்றும் சோழனுக்கும் பாண்டியனுக்கும் உரியது(புறம். 58) என்றுமான உரிமைப் போர் வழி தத்தம் அரசதிகாரம் அடையாள மதிப்பினைத் தக்கவைக்க முயன்று இருக்கின்றன.

தமிழ் பேசும் மக்களின் ஒன்றிணைந்த வாழ்வை அரசதிகாரம் தன் அடையாள மதிப்பாக பெற விரும்புவதற்கான காரணம், போர்ச் சமூக வாழ்க்கையைப் பதிவுசெய்யும் புறநானூறு அரச எல்லை நீட்டிக்கும் போரில் தமிழ் படை வீரர்கள் ஆகச் சிறந்த பலமாக விளங்கியிருந்தமை ஆகும். இதனை மெய்ப்பிக்கும் வகையில்,

“சிறியிலை உழிஞை தெரியல் சூடி
கொண்டி மிகைபட தண் தமிழ் செறித்து
குன்று நிலை தளர்க்கும் உருமின்”(பதி.7.4)

எனத் தமிழ் வீரர்களை உடைய சேரனின் வெற்றிப் படையும்

“தமிழ் தலைமயங்கிய தலையாலம்கானத்து” (புறம்.19)

எனத் தமிழ் வீரர்களை உடைய தலையானங்கானத்து வெற்றிப் படையும் சுட்டப்படுகிறது.

இவ்வகையில் தமிழ் பேசும் மக்கள் ஒன்றாக வாழ்ந்தது நில எல்லையைக் குறிப்பதற்காக மட்டுமன்றி மூவேந்தர் காலப் போர்ச்சமூக அரச ஆளுமைக்கான பலத்தையும் அதிகாரத்தையும் வழங்கும் படைவீரர்க்குரிய மூலதனங்களைப் பெற்றவர்களாக ‘தமிழ்ச் சமூக வெளி’ இயங்கி வந்திருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

**சமண சமய எழுச்சிக் காலத்தில் தமிழ்ச் சமூக வெளி**

அற மற்றும் காப்பிய இலக்கியங்கள் சமண எழுச்சி காலகட்டத்தில் எழுந்தது என்பது அறிஞர்களின் ஒத்த கருத்துடைய முடிவு ஆகும். அற இலக்கியங்களில் தமிழ்ச் சமூக வெளி குறித்த பதிவுகள் பெரியளவில் கிடைக்கப்பெறவில்லை. காப்பிய இலக்கியங்களில் நோக்குங்கால் சிலப்பதிகாரத்தில் மதுரை, சாத்தன் போன்ற பெயர்களுக்கு அடையாய் தமிழ் பலவிடங்களில் எடுத்தாளப்பட்டு இருக்கிறது. அதே சமயத்தில், தமிழ்ச் சமூக வெளி குறித்த இரண்டு பதிவுகள்

இடம்பெறுகின்றன.

“விருந்தின் மன்னர் தம்மொடும் கூடி /அரும் தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கு என /கூற்ற கொண்டி சேனை செல்வது/நூற்றுவர் கன்னர்க்கு சாற்றி ஆங்கு/கங்கை பேர் யாறு கடத்தற்கு ஆவன/வங்க பெரு நிரை செய்க-தாம் என/சஞ்சயன் போன பின் கஞ்சுக மாக்கள்/எஞ்சா நாவினர் ஈர் ஐஞ்னூற்றுவர்/சந்தின் குப்பையும் தாழ் நீர் முத்தும்

தென்னர் இட்ட திறையொடு கொணர்ந்து” (வஞ்சி:26/161)

எனத் தமிழ் ஆற்றல் அறியாது இருந்தோர்க்கு அவர்களது திறம் காட்டப்படுகிறது.

மற்றோரிடத்தில்,

“தன் தமிழ் ஆற்றல் காண்குதும் யாம் என/கலந்த கேண்மையின் கனக விசயர்/நிலம் திரை தானையொடு நிகர்த்து மேல்வர/இரை தேர் வேட்டத்து எழுந்த அரிமா/கரி_மா பெரு நிரை கண்டு உளம் சிறந்து” (வஞ்சி:26/185)

எனத் தமிழ் ஆற்றலைக் காட்டும் விதமான கனகவிசயர் போர்த் தொடுக்கும் காட்சி இடம்பெறுகிறது. இவ்விரு பதிவுகளுமே பல கோணமுடைய அக்காலகட்டத்தில் தமிழ் ஒரு ஆற்றலுடைய சமூக வெளியாகத் தம் கால அதிகாரத்திற்குப் புலப்படாமல் திடீரென புலப்படும் பொழுது ஆரவரிக்கும் தன்மையைச் சுட்டுகிறது. இங்கு தமிழ்ச் சமூகவெளி இருப்பைப் புலப்படத்தாத அற இலக்கியங்களுக்குப் பிற்காலத்திலே காப்பிய இலக்கியங்கள் தோன்றின என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இங்கு, தமிழ்ச் சமூகவெளி புலப்படாமல் திடீரென புலப்படுவதற்கான காரணத்தை அறிந்துகொள்ள பின்னணியில் நிலவும் பண்பாட்டுத் தளத்தை நோக்க வேண்டும்.

**தமிழ்ச் சமூக வெளியில் சமயப் பண்பாடுத் தளம்**

பண்பாடு என்பது பண்பட்டுக் கொண்டே இருக்கும் இயல்புடையது. தொ. பரமசிவத்தின் ‘தெய்வங்களைப் பற்றிப் பேசாமல் ஒரு பண்பாட்டினை ஆய்வு செய்ய இயலாது’ என்ற கருத்தானது பண்பாட்டில் சமயம் பெறும் இடத்தை வலியுறுத்துகிறது. பொருளாதாரத்திலும் அரசியலிலும் உயர்ந்தோரின் பண்பாடே இலக்கியம் போன்ற ஊடகங்களில் மேம்பட்டப் பண்பாடாகச் சித்தரிக்கப்படுகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களில் போர்ச்சமூக அரசதிகாரத்திற்குப் பலமாக தமிழ்ச் சமூக வெளி விளங்கிய காலகட்டத்தில் நேரடியாகத் தமிழ்ப் பண்பாட்டைப் புகழும் பாடல்கள் பல கிடைக்கின்றன. சான்றாக,

“நாள் அணிந்து உவக்கும் சுணங்கறையதுவே/கேள் அணங்கு உற மனை கிளந்து உள சுணங்கறை/சுணங்கறை பயனும் ஊடல் உள்ளதுவே/அதனால் அகறல் அறியா அணி இழை நல்லார்/இகல் தலைக்கொண்டு துனிக்கும் தவறு இலர் இ/தள்ளா பொருள் இயல்பின் தண் தமிழ் ஆய்வந்திலா/கொள்ளார் இ குன்று பயன்/ஊழ் ஆரத்து ஓய் கரை நூக்கி புனல் தந்த/காழ் ஆரத்து அம் புகை சுற்றிய தார் மார்பின்/கேழ் ஆரம் பொறப வருவானை தொழாஅ” (பரி.9. செவ்வேள்) எனப் பரிபாடலில் தமிழ்ப் பண்பாடாக மருதத்திணைக்குரிய கணவன் பரத்தையின்பாற் சென்றதை

அறிந்திராது தன்னியல்பில் செவ்வேளைத் தொழுதிருக்கும் தலைவியைத் தமிழ்ச் சமூக வெளி அறிந்தோராகப் பரிபாடல் காட்சிப்படுத்துகிறது. இப்பாடல் ஒருவகையில் ஊடல் ஒழுக்கத்தையும் செவ்வேள் வழிபாட்டையும் தமிழ்ச் சமூக வெளிக்குரிய பண்பாடாகச் சுட்டி நிற்கிறது.

காப்பிய இலக்கியங்களில், "இளங்கோ வேந்தன் அருளி கேட்ப /வளம் கெழு கூல வாணிகன் சாத்தன்/மா வண் தமிழ் திறம் மணிமேகலை துறவு/ஆறு ஐம் பாட்டினுள் அறிய வைத்தனன்" எனப் பாயிரப் பகுதியில் மணிமேகலையின் துறவு ஒழுக்கத்தினைத் தமிழ்த் திறனைக் கூலவாணிகள் சாத்தன் பாடுவதாக உள்ளது. இங்கு, தமிழ்ச் சமூக வெளிக்குரிய பண்பாடாகத் துறவு ஒழுங்கம் இடம்பெறுகிறது. சிலப்பதிகாரத்தில் தமிழ் ஆற்றல் அறியாதிருந்ததன் தொடர்ச்சியாய் மணிமேகலையின் துறவு ஒழுக்கம் தமிழ்த் திறமாகப் பதிவு செய்யப்படுகிறது. மணிமேகலை, தமிழ்ச் சமூக வெளியின் ஆற்றலை அக்காலக் கட்ட அரசியல் பொருளாதார அதிகாரம் மட்டுப்படுத்த எண்ணியதால் தமிழ்த் திறனாகச் சமணத் துறவு பதிவு செய்கிறது. ஆனால், அவ்வகையில் துறவு நெறியானது தமிழ்ச் சமூக வெளிக்கான திறனாகக் காலவோட்டத்தில் வெகுகாலம் நீடித்திருக்க முடியவில்லை. இதனை வலியுறுத்தும் விதமாகவே, சீவகசிந்தாமணியில் தமிழ்ப் பண்பாடாக இல்லறம் போற்றும் கந்தர்வ மணமான களவு மணமும் இயற்கை புணர்ச்சியும் முறையே பதுமையார் இலம்பகத்திலும் சுரமஞ்சியார் இலம்பகத்திலும் இடம்பெறுகின்றது. சீவகசிந்தாமணிக் கூறும் தமிழ் பண்பாடானது பழந்தமிழ் போர்ச்சமூகத்தின் இலக்கணம் கூறும் அகமணங்கள் ஆகும். அவ்வகமணங்களை தமிழ் பண்பாடாக சித்தரிக்கும் சீவகசிந்தாமணியானது சமண சமயத்தின் துறவறம் போதிக்கும் முடிவை நோக்கிப் பயணிக்கிறது. இது, தமிழ்ச் சமூக வெளி அக்கால அதிகாரத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பலமானதாக இருந்த சமண சமய பண்பாட்டோடு ஒத்திருக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

**தமிழ்ச் சமூக வெளியில் வைதீக சமய எழுச்சி**

அற மற்றும் காப்பிய இலக்கிய காலத்திற்குப் பின் வைதீக சமய எழுச்சியுடைய இலக்கியங்கள் தோற்றம் பெறுகின்றன. பதினெண்கீழ்கணக்கு நூல்களில் இடம்பெறும் வைதீக நூலான கார் நாற்பதிலும் 'சமண சமாத்தவரான கணிமேதாவியார் தன் சமயத்துப் பெரியவர்கள் களவியல் கொள்கையின் மீது கொண்டிருந்த வெறுப்பு நீங்குமாறு அதன் அருமையை விளக்க' வந்த திணைமாலை நூற்றைம்பதிலும் தமிழ்ச் சமூக வெளி இருப்பினை தத்தம் இறுதிப் பாடல்களில் பதிவு செய்கின்றன. சைவ பக்தி இலக்கியத் திருக்கடைக்காப்பிலும் தமிழ் இடம்பெறுகிறது. வைணவ சமய இலக்கியங்களான நாலாயிர திவ்விய பிரபந்தம் கிட்டத்தட்ட 90 இடங்களில் 'தமிழ்'க் குறித்து பதிவு செய்கின்றன. சைவ சமய இலக்கியங்களான பன்னிரு திருமுறை கிட்டத்தட்ட 350க்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ்க் குறித்து பதிவு செய்கின்றன. இங்கு சைவ இலக்கிய பதிவுகளில், முக்கிய இடம்பெறும் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார் ஆகிய படைப்பாளர்கள் பயன்படுத்தும் தமிழ் நிலைப்பாடுகள் அட்டவணையில் நோக்கலாம். நோக்குவதன் வழி அதிகாரத்தில் தமிழ்ச் சமூகவெளிக்குரிய பண்பாட்டு இருப்பைப் புரிந்துகொள்ள முடிகிறது.

| பொருண்மை நோக்கில் | நிலைப்பாடு | சம்பந்தர் | அப்பர் | சுந்தரர் | மாணிக்கவாசகர் | சேக்கிழார் |
|---|---|---|---|---|---|---|
| அடை | தமிழ் | 189 | 1 | 38 | 1 | 207 |
| இறை - தமிழ் | தமிழாகரனே | 1 | | | | |
| இறை - தமிழ் | தமிழாய் | | | 1 | | |
| இறை - தமிழ் | தமிழாகரா | | | | | 1 |
| எழுவாய் | தமிழான் | 1 | | 1 | | |
| எழுவாய் | தமிழன் | | 1 | | | |
| கருவி | தமிழால் | 5 | | 4 | | 8 |
| கருவி | தமிழ் மாலை | | 1 | | | 36 |
| கருவி | தமிழ் தன்னால் | | | | | 1 |
| கருவி | தமிழ் தொடை | | | | | 14 |
| கருவி | தமிழ்மாலை தன்னில் | | | | | 1 |
| கருவி | தமிழ் மாலைகள் | | | | | 11 |
| கருவி | தமிழ் மாலைகளும் | | | | | 2 |
| கருவி | தமிழ் மாலையாலே | | | | | 1 |
| கருவி | தமிழ் மாலையின் | | | | | 1 |
| கருவி | தமிழினால் | | | | | 1 |
| கொடைப் பொருள் | தமிழ்க்கு | 1 | | | | |
| கொடைப் பொருள் | தமிழுக்கு | | | | | 1 |
| விளி | தமிழாளி | | | | | 1 |
| விளி - ஒருமை | தமிழே | 1 | 1 | | | |

இந்த அட்டவணை வழி, சம்பந்தர் தமிழ்ச் சமூகவெளியின் ஒரு முகவராகவே தன்னை அடையளப்படுத்த 'தமிழ்' எனும் பெயரடையை பல இடங்களில் பயன்படுத்துகிறார். பக்தி இலக்கியக் காலகட்டத்தில் அரசதிகாரத்திற்குப் பக்தியும் பக்திக்கு அரசதிகாரமும் பலமாக விளங்கியமை யாவரும் அறிந்த ஒன்றே. இங்கு, பக்தி அதிகாரப் பலமாக இருந்த காலத்தில் பக்தியை அடைவதற்கான கருவியாகவும் வழிபடும் இறைவனுக்கான விளியாகவும் 'தமிழ்' நிலைப்பாடு பயன்பாடானது அக்காலக்கட்டச் சமூகத்தில் தமிழ்ச் சமூக வெளியின் அதிகாரத்தைக் குறித்து நிற்பதாகிறது.

**தொகுப்புரை**

பழந்தமிழ் இலக்கியக் காலத்தில் போர்ச் சமூதாய அரசதிகாரத்தின் நில எல்லை பராமரிப்பிலும் போர்ப்படை வெற்றியிலும் தமிழ் மக்களின் ஒன்றிணைந்த வாழ்வு அதிகாரத்திற்கான பலமாக இருந்துள்ளது. எனவே, தமிழ்ச் சமூகவெளி ஒன்று சமூகத்தில்ல் நிலவியது உறுதியாகிறது. அற இலக்கியத்தில் தமிழ்ச் சமூகவெளி குறித்த பதிவுகள் கிடைக்கப்பெறவில்லை. காப்பிய இலக்கியங்களில் தமிழ் ஆற்றல் புலப்படாது இருந்தவர்களுக்கு அவர்தம் ஆற்றலை வெளிப்படுத்தும் காட்சிகள் இடம்பெறுவது, அற இலக்கிய சமூகவெளி குறித்த பதிவுகள் இல்லாதிருப்பதோடு ஒப்புநோக்கி உணரத்தக்கது. மேலும், காப்பிய இலக்கியங்களில் தமிழ்ச் சமூக வெளிக்கான தனித்திறனாகத் துறவொழுக்கத்தை மணிமேகலை கூறமுனைந்தாலும் சீவகசிந்தாமணி இல்லற வாழ்விற்கான கந்தர்வ மணத்தையும் இயற்கை புணர்ச்சியையும் தமிழ் அறிந்தோர் பண்பாகச் சுட்டப்படுகின்றது. இது கொண்டு, சமண சமய தத்துவம் கூறவந்த இலக்கியங்களில் தமிழ்ச் சமூகவெளிக்கான பண்பாட்டு இருப்பு மட்டுப்படுத்தப்பட்டமை புலனாகிறது. இதன் தொடர்ச்சியாய் வந்த வைதீக சமய இலக்கியங்களில் தமிழ்ச் சமூக வெளி அதிகார ஆற்றலுடையதாக இருந்துள்ளது என்பதை அரசதிகாரத்திற்கும் மேலாக இறைவனை மதிக்கும் வைதீகச் சமயப் பண்பாடு இறைவனைத் ‘தமிழ்’ கொண்டு விளிப்பதும், அவ்விறைவனை அடைவதற்கான கருவியாகத் தமிழ் நிலைப்பாடு எடுப்பதும் தமிழ்ச் சமூக வெளி அதிகாரப் படிநிலை வளர்ச்சி பெற்றுள்ளதை நிறுவுகிறது.

**துணைநூற்பட்டியல்**

Pierre Bourdieu.(1985). The Social Space and the Genesis of Groups, Theory and Society. Vol. 14, pp. 723-744, Springer, URL: https://www.jstor.org/stable/657373

Concordances (tamilconcordance.in)

பன்னிரு திருமுறைத் தொகுதி, தருமை ஆதின பதிப்பு, 2011.

Tamil vitual University – நூல்கள் | தமிழ் இணையக் கல்விக்கழகம் TAMIL VIRTUAL ACADEMY (tamilvu.org)

Madurai Project - Project Madurai - List of works